



# உளிகள்

வேலணையூர் பொன்னண்ணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MANN (ERDE) MAGAZIN
V. Sivarajah
Am Windhövel 183
47249 Duisburg
Germany

POET..
VELANAIYOOR PONNANNA
FYRREVÆNGET-311
7190. BILLUND. DENMARK
TLF:_ FAX-45..75338742
E.M: pon@stofanet.dk
PONNANNA@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளிகள்

(மின்பாக்கள்
கவிதைத் தொகுப்பு)

**வேலணையூர் - பொன்னண்ணா**

ஏழாவது வெளியீடு

வெளியீடு
திருமதி. பொன்மணி
“அறிவகம்”
டென்மார்க்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உரிமைகள்

**ஆசிரியர்**

*வேலணையூர் - பொன்னண்ணா*

**முதற்பதிப்பு**

**01. 05. 2004**

**வெளியீடு**

*திருமதி. பொன்மணி*

*அறிவகம்*

*டென்மார்க்*

**ஓவியம்**

*ராயன், தயா, பயஸ்*

**அச்சுப்பதிப்பு**

*நிலா பதிப்பகம்*

*கிளிநொச்சி*

**விலை**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்

இனவிடுதலையின் வேர்களாய் கண்ணுக்குத்
தெரியாது மண்ணுக்குள் மறைந்து. வீரத்தின்
வீச்சை விசையேற்றிக்கொண்டு
வெற்றிப்படிகளில் தலைவரையும் தம்
இனத்தையும் நடக்கவைத்துக்கொண்டிருக்கும்
வீரமுத்துக்களுக்கும். அவர்களை எம்
விடுதலைக்குப் பெற்று வளர்த்து விட்ட அந்தக்
கருவின் சொந்தக்காரரும் அவரைத் தாங்கி
வளர்த்த கருப்பைச் சொந்தக்காரருமான
மாபெரும் தியாக தெய்வங்களின்பாதடியில் எனது
இந்தக் கவிதைத் தொகுப்பை சமர்ப்பணம்
செய்கிறேன்.

– ஆசிரியர் –





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அணிந்துரை

### மின்பாக்கள்

- சுண்டக் காய்ச்சிய பாலாய் தித்திக்கும் காதல் கவித்துளிகள்
- கனக்கும் நெருப்புப் பொறியாய் சுட்டுப் பொசுக்கும் சமுதாய கவித்துளிகள்
- எழுத்துக்களிலெல்லாம் ஈழத்துச் சோகம்
- பெயருக்கேற்ப தங்கமாய் ஜொலிக்கிறார், மின்னண்ணாவாக மிளிர்கிறார்.

பனி படர்ந்த ஒரு தேசத்திலிருந்து தினந்தோறும் வைகறைச் சூரியனாய் உலகத் தமிழர்களை துயில் எழுப்புகிறார் கவிஞர் வேலணையூர் பொன்னண்ணா அவர்கள். "தமிழால் ஒன்றிணைவோம்! தமிழர்க்கோர் நாடு செய்வோம்!" என்ற இலட்சிய வரிகளை இதயத்தில் ஏந்தி, அதைக் கவித்துளிகளாய் படைத்து, சர்வதேச அளவில் வெளிவரும் அனைத்து இதழ்களிலும் பதிவு செய்து வருகின்றார். எல்லோராலும் பாராட்டப் பெற்ற இவரது ஆய்வுக் கவிதைகள் ஏழைதாசனில் மிகுதியாக வெளியிடப்பட்டன. சுண்டக் காய்ச்சிய பாலாய் தித்திக்கும் காதல் கவித்துளிகள் கனக்கும் நெருப்புப் பொறியாய் சுட்டுப் பொசுக்கும் சமுதாய கவித்துளிகள் எனில் மிகையில்லை. இந்நூலில் பல இடங்களில் 'ப்ளிச் ப்ளிச்' என மின்னும் பாக்கள் கண்ணையும் கருத்தையும் கவர்கின்றன. அதே வேளை மின்சார வயரைத் தொட்டால் 'சாக்' அடிக்கும் அதிர்ச்சியையும் தரவல்ல பாக்களை படித்துச் சுவைத்து மகிழ்ந்தேன்.

தனது பதினேழு வயதில் மக்கள் பணியை உள்வாங்கிய ஓர் இலக்கிய வாதி இவர். 26.05.1939 இல் பிறந்த அன்னாருக்கு தற்போதைய அகவை அறுபத்தி நான்கு. இந்த அகவையிலும் இருபத்திநான்கு வயது இளைஞனுக்குரிய துடிப்போடும் செயல் வேகத்தோடும் இலக்கியப் பணியாற்றி வருகிறார். ஈழத்து மண்ணில் தோன்றி 1983 இல் நடந்த சிங்களவர் – தமிழர்கள் இனப்போரின் காரணமாக டென்மார்க் நாட்டில் புலம் பெயர்ந்த தமிழராக வாழ்ந்து வருகிறார் இக்கவிஞர் பெருமகனார். இவரின் எழுத்துக்களிலெல்லாம் சொல்லவொண்ணா ஈழத்துச் சோகம் ததும்பி நிற்கக் காண்கின்றேன்.

குழந்தை அழுகிறது புதுச்சட்டை வேண்டும், அதுவும் பட்டுச் சட்டையாக இருக்க வேண்டும் என்று அடம்பிடிக்கிறது. ரவிக்கை இல்லாத ஏழைத்தாய்மார் "கடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வீதிக்கு போகும் போது அவசியம் வாங்கித் தாரேன் இப்போ சாப்பிடு என் கண்ணல்ல" என்று சமாளிக்கிறாள். யாழ்குடா மீன் பிடித் தொழிலாளர்களுக்கு பிரச்சனை கோரிக்கை நிறைவேறுகிறதா என்ன? என்பதை எவ்வளவு இலாவகமாகச் சொல்லுகிறார் பொன்னண்ணா!*

*"பசியால் அழும் குழந்தைக்கு*
*பட்டுச்சட்டை உறுதிமொழிபோல்*
*யாழ்குடா மீனவர்க்கு மந்திரி உறுதிமொழி!"*

*இருபது ஆண்டுகளாக நடந்துவரும் போரை முடிவுக்கு கொண்டுவர பிரதமர் ரணில் விக்கிரம சிங்கே அரும்பாடு படுகிறார். நோர்வே நாட்டு தூதுக்குழுவும் விடாமுயற்சி மேற்கொண்டு வருகிறது. ஆறு தடவைகள் பேச்சு வார்த்தை நடந்து விட்டது. விடுதலைப் புலிகளும் சமாதான ஒப்பந்தத்தை ஏற்க முன் வந்து விட்டார்கள். உலகமே இத்தகைய முன்முயற்சியைப் பார்த்து அதிசயித்து மூக்கில் விரல் வைக்க அதிபர் சந்திரிகா குமாரதுங்காவோ சமாதானத்தின் குரல்வளையைப் பிடித்து நெரிக்கிறார். பலவந்தமாக மென்னியை இறுக்குகிறார். இந்நிகழ்வை அப்படியே கவிதைகளாக்குகிறார் கவிஞர்.*

*"கொட்டிய பூவாய்*
*தட்டிய பாலாய்*
*சமாதானப் பேச்சு!"*

*"வெள்ளைக் கொடியோடு*
*ஈழுவன்*
*வெடிகுண்டோடு சிங்களப்படை!"*

*"கோயில் முகப்பில்*
*சூலத்துடன் வைரவர்*
*சந்தி முகப்பில் துவக்கோடு இராணுவம்!"*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"விளையாட்டுப் பொருள்
தமிழன் தலை
சிங்கள இராணுவத்துக்கு!"

"இழப்பதற்கு எஞ்சி இருப்பது
உயிர் என்ற பின் தான்
தமிழன் தூக்கினான் ஆயுதம்!" - இந்த ஒவ்வொரு
கவிதையும் ஈழமண்ணில் நடக்கும் வன்கொடுமையைச் சித்தரிக்கிறது சிங்களப் பேரினவாதத்தை எச்சரிக்கிறது.

வீரமும் மானமும் உயிராய்க் கொண்ட தமிழினம் வெறுமனே சும்மா இருந்து விடுமா? போரின் விளைவுகளால் புறமுதுகுகாட்டி தமிழர்கள் புறப்பட்டு விடுவார்களா? பாய வந்த புலியை முறத்தால் (சுளகு) அடித்தே விரட்டிய தமிழச்சி இனமாயிற்றே...

"தொலைந்து போன கணவன் மாரை
தேடிக் கொள்ள முடியாத சாவித்திரிகள்
ஈழத்தில் இன்னும்!"

"மதுரையை எரித்த
கண்ணகிகள்
சிறிலங்காவிலும் உருவாகலாம்!"

"வரப்பில் கஞ்சியோடு அன்று
தோளில் துவக்கோடு இன்று
ஈழத்து வீரத்தாய்மார்!"

தன் தாய் மண்ணுக்காக - தமிழர் நலனுக்காக - தமிழின் விடுதலைக்காக உயிர்த்தியாகம் செய்த வீரர்களின் நினைவுநாளான 'மாவீரர் தினமாக' நவம்பர் - 27 கொண்டாடப்பட்டு வருகிறது. இது குறித்து இவர் வரைந்த முத்தாய்ப்புக் கவிதை இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இடிக்கப்பட்டது மாவீரர் சமாதி
ஊற்றப்பட்டது நெய்
விடுதலைத் தீய்க்கு"

"மாவீரர் கல்லறையில்
அழுகை வேண்டாம்.
சபதம் செய்யுங்கள்!"

இக் கவிதை ஏழைதாசன் வெளியிடவுள்ள அய்க்கூ - 500 துளிப்பாத் தொகுப்புக்கு தேர்வு பெற்று, ஏழைதாசன் திங்கள் இலக்கிய இதழ் நவம்பர் - 2003 இல் வெளிவந்து வாசகர்களின் வரவேற்பைப் பெற்றதாகும்.

தமிழருடைய ஒருவனுக்கு ஒருத்தி என்ற ஒழுக்கநெறி காதல் பண்பாடு, கலாச்சார மேம்பாடு இன்றைய மேலை நாகரீக மோகத்தால் மெல்ல மெல்ல மாறி வருவதைச் சுட்டிக் காட்டுகிறார். எத்தனை வசீகர வார்த்தைகள் கூரிய பார்வைகள்!

"அழகான தன் முகத்தை மூடும்
கைவிரல் இடைவெளியால் பார்ப்பதே
காதலின் உச்சக்கட்ட அடையாளம்!"

"சின்னத்திரை தொடர் ஆதிக்கம்
அடுப்பில் சட்டி எரிந்து
பக்கத்து வீட்டில் சலசலப்பு!"

"அழகிய தேவகன்னித் தோற்றம்
அற்புத உடை
நிற்பதோ சிவப்பு விளக்குப் பகுதி!" - இது போன்ற ஈர்த்து விடுகிற கவிதைகளில் 'பொன்னண்ணா' பெயருக்கேற்ப தங்கத்தைப் போன்று கருத்துக்களில் ஜொலிக்கிறார். சிந்தனை வீச்சில் மின்னண்ணாவாக மிளிர்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்தாளர் சுஜாதா சொல்வது போன்றெல்லாம் அளவுகோல் வைத்துக் கவிதைகள் படைக்க முடியாது. 5-7-5 அசை வைத்து, சீர் பார்த்து, தளைதட்டி எதுகை - மோனையோடும் ஓசையோடும் கட்டுப்பாட்டுக்குள் எழுத அய்க்கூ என்பது மரபுக் கவிதை . புதுக்கவிதை அல்ல. "உள்ளத்தில் உள்ளது கவிதை, உண்மை ஊற்றெடுப்பது கவிதை, தெள்ளத் தெளிவது கவிதை எதையும் தெளிந்து உரைப்பது கவிதை" என்ற நாமக்கல் வெ. இராமலிங்கனார் கூறியதுபோல் கவிதை இருக்கிறதா என்பதை நாம் கண்டுகொள்ள வேண்டும். யப்பான் தேசத்தில் உதயமான அய்க்கூ பருவகாலங்களையும் இயற்கை அழகியலையும் மையமாகக் கொண்டு விளங்கியது. பொருளாதார தன்னிறைவு பெற்ற அவர்கள் பாடலாம். இங்கே மனிதவாழ்வே போராட்டத்தில் தொடங்கி போராட்டத்திலேயே முடிந்து விடுகிறது. இனக்கலவரம், சாதிக்கலவரம், அரசியல் சுரண்டல், வேலையின்மை, பசி, பஞ்சம், பட்டினி என்று வாழ்க்கையே ஒரு யுத்தக் களமாகி வருகிறது. சாடல்கள், மூடநம்பிக்கை எதிர்ப்புகள், சமூக கிண்டல்கள் இடம் பெறுகின்றன. உலகம் முழுக்க இன்று அய்க்கூ எழுதப்படுகிறது. "மூன்றடிக்குள் ஒரு முத்தான செய்தி, சிந்தனை, கருத்து க்கற்பனை, காட்சி, படார் என்றோர் அடி...! இப்படியிப்படித் தமது உள்ளடக்க உணர்வால் நிமிர்ந்து நிற்கின்றன அய்க்கூ கவிதைகள்" என அமுதபாரதியும், "முதலடியில் சொல்லவந்த விசயத்தை எடுப்பாக்கி, இரண்டாவது அடியில் தொடுப்பாக்கி, மூன்றாவது அடியில் மின்தாக்கு முடிப்பு அமைய வேண்டுவது அய்க்கூ யாப்பு" என நெல்லை சு. முத்துவும் வரைவிலக்கணத்தை எடுத்தியம்புகிறார்கள். இதையே கொஞ்சம் சுருக்கி புரியும் விதமாக, மூன்றடிக்குள் ஒரு கவித்துவத்தை எழுதினால் போதுமானது என்று கொள்ளலாம்.

கவிஞன் இங்கே ஒரு தீக்குச்சி. வாசிப்பாளன் ஒரு தீப்பெட்டி. தீக்குச்சி என்னும் படைப்பை வாசிப்பாளன் தனது மனத்திரையில் உரசிப்பார்த்தால், உடனே பற்றிக் கொண்டு அழகான வெளிச்சத்தை தந்து விடுகிறது அற்புதமான அய்க்கூ. அமெரிக்காவில் வெளிவரும் மாடர்ன் அய்க்கூ தொகுதி 31.01.2004 இதழில் நான் மிகவும் ரசித்த ஒரு அய்க்கூ :



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"Moonless night*
*guided by the fragrance*
*of the garden "*

*-Marjorie buttner-*

*ஏற்கனவே இவர் வெளியிட்ட 'பச்சை இறகு' என்னும் அய்க்கூ நூலுக்கு என்னிடம் அணிந்துரை கேட்டிருந்தார். நான் எழுதி அனுப்பி அது அவர் கைக்கு கிடைக்காமல் தபாலில் தவறி விட்ட போதும், முன் யோசனையோடு அந்நூலில் ஏழைதாசனில் வெளிவந்த வாசகர் வட்ட கடிதங்களை பிரசுரித்து பெருமை சேர்த்திருந்தார். ஏழைதாசன் இதழுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகிறார். அவ்வப்போது அன்புதவியும் செய்வதை மறக்க இயலாது. பல தடவை தொலைபேசியில் தொடர்புற்று எமக்கு அரிய ஆலோசனை நல்குவார். அவரது கவிதை நெஞ்சை கனத்த இதயத்தோடு பார்க்கின்றேன். அவரது மேன்மையான செயலாற்றலைக் கண்டு வேர்க்கின்றேன்.*

*ஒரு கால கட்டத்தில் பிறை நிலாக்கள் மட்டுமே அய்க்கூ எழுதி வருவதாக குற்றச்சாட்டு இருந்தது. இன்றைய காலத்தில் கவிக்கோ அப்துல் ரகுமான், ஈரோடு தமிழன்பன், டாக்ரர் மித்ரா, கவிஞர் நிர்மலா சுரேஷ் போன்ற முழு நிலாக்களும் அய்க்கூ வானத்தை அழகுபடுத்தி வருகிறார்கள். இந்த வரிசையில் பெரியவர் கவிஞர் வேலணையூர் பொன்னண்ணாவும் வந்து அழகு சேர்க்கிறார். அய்ரோப்பாவின் முதல் அய்க்கூ தொகுப்பான 'பச்சை இறகு' சாதனையை அடுத்து 'மின் பாக்கள்' இரண்டாவதாக வருகிறது. அவரது முதல் சாதனையை அவரே முறியடித்து மீண்டும் இரண்டாவது நூல் வெளியிடுகிறார்.*

*இமாலய சாதனை புரிய*
*இதயங் கனிந்த நல்வாழ்த்துக்கள்!*
*ஏற்றம் மிகுந்த கவிதைப் பணிக்கு*
*இயற்கை அன்னை துணை நிற்பாளாக!*

**எஸ். விஜயகுமார்**
ஆசிரியர்
ஏழைதாசன் மாத சஞ்சிகை,
புதுக்கோட்டை,
தமிழ் நாடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்புரை

கடுகு அளவில் சிறிதாக இருந்தாலும் உணர்வுக்கு ருசியேற்றும் கவிதைகள். வடிவம் சிறியதாக இருந்தாலும் சிந்தனைச் சிதறல் மனதில் சிறகடிக்கும் ஒன்றே முக்கால் அடிகள் தான் .உலக பொதுமறையானது. உலக மொழிகள் அனைத்திலும் மொழி பெயர்க்கப் பட்டது. புலம்பெயர்ந்த தமிழர்கள், தமிழுக்கும், தமிழர்க்கும் ஆற்றிவரும் தொண்டு அளவிட முடியாதது. *

இன உணர்வுடன் இலக்கியச் சேவை செய்து வருபவர்கள் பலர் அவர்களுள் கவிஞர் வேலணையூர் – பொன்னண்ணா அவர்கள் புலம்பெயர் மண்ணில் மிக முன்னணியில் திகழ்கின்றார். புலம்பெயர் வாழ்க்கையில் பலர், தான், தன்குடும்பம் என்று வாழும் காலகட்டத்தில். தன்குடும்பம் என சுருங்கி விடாமல் தொடர்ந்து பத்திரிகை, வானொலி, சஞ்சிகை என்று தனது அகவை அறுபத்தைந்திலும் உணர்வோடு இளம் குருதிகள் சிலிர்த்தெழும் உணர்வலையில் பல சிந்து கவிதைகளை எழுதி வருகின்றார்.

உதாரணமாக...
ஏழைக்குமரியின் அழுக்குப் பாவாடை
கிழியல் ஓட்டை
பணக்காறனுக்கு வானத்து நட்சத்திரம்.

என்ற கவிதையில் ஏழை பணக்காறன், ஏற்றத்தாழ்வு இந்த இருபத்தி ஓராம் நூற்றாண்டிலும் தொடர்வதையும், ஏழ்மையின் கொடுமையையும் பணக்காறனின் காம வக்கிர புத்தியையும். தோலுரித்து கவிதைகளால் சவுக்கடி தருகின்றார். ஒருபானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல ஒரு கவிதையை மட்டும் சுட்டிக்காட்டி இருக்கின்றேன். இன உணர்வோடு 'மனித நேயத்தை வலியுத்தும் வகையில் கவிதைகளை படம்போட்டு செதுக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்பனிட்டு இருக்கின்றார் கவிஞர் பொன்னண்ணா அவர்கள். சிலையில் உள்ள கலை அம்சம் அவர் கவிதையிலும் என்னால் காணமுடிகின்றது. போரில்லா உலகம் வேண்டும். தமிழர்களின் இன்னல் கொண்ட வாழ்வில் விடியல் வேண்டும் என்ற கருத்துப்பட இவர் உணர்வோடு உரக்கக் குரல் கொடுத்துள்ளார். கவிதைகளின் மூலம் படித்து முடித்த வாசகன் படித்து முடித்த பின்னும் அவன் சிந்தனையில் அசைபோடும் வண்ணம் அற்புதமாக கவிதைகளையும் கவிதை கொண்ட கருக்களையும் திரட்டி இருக்கிறார் கவிஞர் அவர்கள். போலி வேசமிடும் இன வெறியர்களின் மூடு திரையை பேனாக் கத்தி கொண்டு கிழித்தெறிந்திருக்கிறார். நெஞ்சத் துணிவோடு கவிதை படைத்த பொன்னண்ணாவின் கவிதைகளை நானும்படித்து ருசித்து பொன்னண்ணா உங்கள் கவிதைகள் எல்லாமே பொன். அண்ணா என்று மனதார வாழ்த்தி அவரின் தமிழ்ப்பணி வளர தொடர மீண்டும் மீண்டும் வாழ்த்துகிறேன்.

அன்புடன்
கவிஞர் **இரா. இரவி**
மாமதுரை கவிஞர் பேரவை
தமிழ் நாடு
இந்தியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்கருத்து

வணக்கம்!

அன்புடையீர்!

நான் இலக்கியப் பயணத்தில் தொடர்ந்து பயணிக்க என் பயணத்தின் பாதையாய், படிக்கட்டாய் தொடர்ந்து என் நரம்பின் குருதியாய் ஆதரவு தரும் என் அன்புக்குரிய வாசகப் பெருமக்களே...! வணக்கம்.

முன்னர் ஆறுதடவைகள் உங்களுடன் நிலமாகி, வெந்தவனம், அன்னை அபிராமி பஜனைப் பாடல்கள், பக்திப் பஜனைப் பாமாலை, நெஞ்சத்து நெருப்பு போன்ற எனது படைப்புக்களை உங்களுக்குத் தந்து உள்ளேன். நீங்கள் நீட்டிய அன்புக் கரத்தின் உற்சாகத்தின் மிகுதியால் மீண்டும் உங்களிடம் **உளிகள்** என்ற புதிய படையலான மின்பாக்களுடன் உங்கள் முன்வந்துள்ளேன் .என்னை நீங்கள் வரவேற்பீர்கள் என்ற பூரண நம்பிக்கையோடு.

தமிழ் இலக்கிய வரம்பில் பலவிதமான பயிர்களை காலத்துக்கேற்ப பயிரிடவேண்டும் என்ற எனது இதயத்தின் துடிப்பில் தமிழ் வளர்ச்சி கண்ட நம்மினத்தின் வரலாற்றில் கவிதையே தமிழ்த்தாயகத்தின் முதல் பிள்ளையாய் காவியங்கள் காட்டி நிற்கின்றன. இந்த நேரத்தில் இடர்சூழ்ந்த எம்சமுதாயத்தின் எதிர்கால சந்ததிக்கு நாம் விட்டுச் செல்லும் விபரக்கொத்தாக வரலாற்றுத் தேடலாக தடயங்களாக இவை இருக்காதா என்ற சிந்தனையே இந்த வெளியீடுகளாகும்.

எனது இலக்கிய பயணத்தில் தமிழகத்தில் வெளிவரும் பலவித சிற்றேடுகளில் ஒன்றான ஏழைதாசன் எனும் பெயருடன் புதுக்கோட்டையில் அச்சாகி அகிலமெலாம் வீதிவலம் வந்து தமிப்பணி ஆற்றி வரும் ஏழைதாசன் சஞ்சிகையில் தொடர்ந்து எழுதி பலவாசகரின் பாராட்டுக்களைப் பெற்ற இந்த மின்பாக்கள் என்ற புதிய நாமகர்ன தமிழ்ப்பாக்களை உங்களிடம் தருகின்றேன். எனது ஐந்தாவது வெளியீடான பச்சை இறகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*என்ற ஹைக்குவிக்கும் இதற்கும் வேற்றுமை குறைவாக இருந்தாலும் ஏன் நாம் இதற்கு பெயரை தமிழில் எடுக்காமல் ஜப்பான் மொழிக்குச் செல்வதா என்று என்னுள் எழுந்த ஒருவகை ஆதங்கமே நான் இதற்கு மின்பாக்கள் என்று பெயரிட்டுள்ளேன்.*

*இந்தத் தொகுப்புக்கு பெருமை சேர்க்கும் தமிழக ஏழைதாசன் சஞ்சிகை ஆசிரியர் எஸ். விஜயகுமார் பி.ஏ அவர்கள் முன்னுரை தந்ததற்கும். மாமதுரை கவிஞர் சங்கத்து தலைவர் இரா. இரவி அவர்கள் சிறப்புரை தந்ததற்கும். மற்றும் என் வாழ்க்கைப் பயணத்தில் என்னுடன் பயணித்தது மட்டுமல்லாமல் என் இலக்கிய பயணத்திலும் கூடவே பயணித்து என் தொகுப்புக்களை எல்லாம்வெளியீடு செய்து ஊக்குவித்து வெளியீடுகளுக்கு ஊட்டச்சத்தாய் உற்சாகம் தரும் அன்பு மனைவிக்கும் என்றும் நான் நன்றி உள்ளவன் என்பதை கூறி உங்களிடம் விடைபெறுவது.*

*அன்பின் அண்ணன்*
***வேலணையூர் பொன்னண்ணா***

**Soisort vej - 18 s, t.t.h**
**7190 Billund**
**Denmark**
**T.P &fax 45 - 753387792**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசியால் அழும் குழந்தைக்கு
பட்டுச்சட்டை உறுதி மொழிபோல்
யாழ்குடா ம்னவர்க்கு மந்திரி உறுதி மொழி.

கட்டைக் கொடியில் கட்டிய
மேச்சல் பசுக்களே..
அன்னிய நாட்டு அகதிகள்.



அழகிய தேவகன்னித் தோற்றம்
அற்புத உடை
நிற்பதோ சிவப்பு விளக்குப்பகுதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானம்பற்றி ஓலமிடும் தன்மானங்களே
மானம் மறைக்கத்தான் நாங்கள்
நிர்வாணம் ஆகுகின்றோம்.

ஏழைக்குமரியின் அழுக்குப் பாவாடை
கிழியல் ஓட்டை
பணக்காறனுக்கு வானத்து நட்சத்திரம்.




விசப்பாம்பின் பல்லைப் பிடுங்கினாலும்
விசப்பாம்பு விசப்பாம்புதான்
அதிகார அம்மணியின் செயல்பாடு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொல்லைக்குப் பயந்தோருக்கு பரிசு
தமிழக அரசு..
தொட்டில் குழந்தைத் திட்டம்.

அழகான தன் முகத்தை மூடும்
கைவிரல் இடைவெளியால் பார்ப்பதே
காதலின் உச்சக்கட்ட அடையாளம்.



வன்னிக்காடு விளைந்து விட்டது
நெல்மணிகள் குவிந்து விட்டன
எந்தநெல்லு விதை நெல்லு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாராயக் குதக்காறன் பெண்டாட்டிக்கு
பிள்ளை பிறந்தது
ஈரலில்லாமல்.

பொட்டு வைக்கிறாள்
விதவை
தன் பிள்ளைக்கு.



விளையாட்டுப் பொருள்
தமிழன் தலை
சிங்கள இராணுவத்துக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொட்டிய பூவாய்
தட்டிய பாலாய்
சமாதானப் பேச்சு போகாவிட்டால் நன்று.




தொலைந்து போன கணவன்மாரை
தேடிக்கொள்ள முடியாத சாவித்திரிகள்
ஈழத்தில் இன்னும்.

நாளைய சரித்திரங்கள்
இன்றைய...
செம்மணி புதைகுழிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செட்டை இருந்தால் பறந்துவிடலாம்
கூட்டுப் புழு சொன்னது
சத்தம்போட்டு சிரித்தது கூண்டுக்கிளி.

கரைசேர்ப்பதாய்ச் சொல்லும் உலகநாடு
கையை விரித்து விடுமோ..!
தன் திட்டம் நிறைவுவந்ததும்.



ஏமாற்ற நினைத்த அதிகார அம்மணி
நோர்வேயை அழைத்தா..!
நடப்பதோ தெய்வத்தின் தீர்ப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரம்பில் கஞ்சியோடு அன்று
தோளில் துவக்கோடு இன்று
ஈழத்து வீரத்தாய்மார்.




மனைவி நெஞ்சில்
சந்தேகம் வெடித்தால்
அதன் பெயர்தான் பூகம்பம்

தவறணை மேசையில்
அப்பாவின் தொப்பி
சமத்துவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொட்டினான் சமையல் காறன்
பழைய வடைகள்
ஆட்டுக்கல்லுக்குள்.

வயோதிபத்தின் மறுமணம்
கன்னிப்பெண்ணுக்கு
தூக்குக்கயிறு.



அனுமதி இல்லா ஆக்கிரமிப்பு
சந்திரிகாவின்
ஆட்சிக் கலைப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதுரையை எரித்த
கண்ணகிகள்
சிறிலங்காவிலும் உருவாகலாம்.



இழப்பதற்கு எஞ்சி இருப்பது
உயிர் என்ற பின்தான்
தமிழன் தூக்கினான் ஆயுதம்

தண்ணியாயிருந்த தமிழ் இளஞரை
பனிப் பாறை ஆக்கியது
இனவாதத் தரப்படுத்தலே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தென்றலாய் வாழ்ந்த தமிழ்ப்பெண்களை*
*சீறும் சூறாவளி ஆக்கியதும்*
*சந்திரிகாவின் சண்டித்தன அரசியலே...!*




*புத்தரை மறந்திட்ட போதிமரங்களாய்*
*ஸ்ரீலங்காவின்*
*பௌத்த பீடங்கள்*

*கட்சிக் கொடிக்கு சாயம்பூச*
*தேசியக் கொடியை ஏலம்போடுது*
*சிங்கள இனவாதம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளை மாளிகையில் அலறல்
டெலிபோன் சத்தம்...
ஈராக்கில் இருந்து வரும் செய்திகள்

பாலைவன நாடு ஈராக்
பற்றி எரியுது குண்டில்
மக்களைக் காப்பாற்றவாம்...!




ஈழத்தமிழன் பசியில் சாவானேதவிர
இன்னொருதரம்
ஏமாற மாட்டான் என்பதுறுதி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளைக் கொடியோடு
ஈழவன்
வெடி குண்டோடு சிங்களப்படை

அழிந்த தழிழை ம்ட்டவரன்று
அண்ணா
இன்று அழியும் தமிழைக் காப்பதுயாரோ!?



நோயை மாற்றவிரும்பாத வைத்தியர் மருந்துசெய்தால்
தமிழர் பிரச்சனை நோய்
வளராமல் என்ன செய்யும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாவுக்கு அழைப்பு மகனார்
கனடா வரச்சொல்லி
மனைவி பெறுமாதம்.



பிறேக்கின்றி படைகள் வாகனம் ஓடுது
யாழ்ப்பாணத்தில்.. தொடர்ந்தால்
மின்சார மணிகளாய்த் தமிழன்.

மலையருவி வழிந்தோடுது
வாய்க்கால் கட்டினால் பயிருக்குதவும்
பயிர்வளர்க்க விரும்பியவனுக்குத்தானே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சனையை த்ர்கத் திட்டம் தமிழர் போடுறார்
எதிரி பணத்துக்கு மட்டுமே பாலம் போடுறான்
சமாதானத்தின் நிலை..!

பணம் சேர்த்து விட்டேன்
வாழ்க்கைக்கு.. ஆனால்
வாழ்க்கையைத் தொலைத்து விட்டேனே.



ரசம் போன கண்ணாடியாய்
வன்னித்தமிழன்
வ்ரத்தின் வடுக்கள்..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானம் இருண்டு போச்சு
மிருகங்கள் வ்டு திரும்புதுகள்
வீதியில் கடை விரிக்கிறான் உப்பு வியாபாரி...!

பறவைகள் சிறகடிப்பு
மக்கள் தூக்கத்தில்
நடந்தது நிலநடுக்கம்.



போர் நிறுத்தம் சமாதான ஒப்பந்தம்
பல நாடுகளில் கூடிப்பேச்சு - அரசு
திரும்பும்போது ஆயுதக் கொள்வனவு...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னத்திரைத் தொடர் ஆதிக்கம்
அடுப்பில் சட்டி எரிந்து
பக்கத்து வீட்டில் சலசலப்பு...!

கோவில் முகப்பில்
சூலத்துடன் வைரவர்
சந்தி முகப்பில் துவக்கோடு இராணுவம்..!



வீதி ஓரத்தில்
ஒத்தைச் செருப்புக்கள்
இராணுவ அட்டகாச நினைவுச்சின்னங்கள்...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னி வயல்களில் இன்னும்
வெடிக்காத விதைகள்
கண்ணி வெடிகள்...!




ஏற்றார் தமிழர்கள் சனாதிபதியாய்
அம்மாவை அன்று - இன்று
ஏற்க மறுப்பதேன் ஜனனாயக வாதியாய்?

எளிதில் நழுவி இருக்கலாம்
ரணில் ஐயாவும்
உலக நாடுகள் தலையிடாது இருந்திருந்தால்...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுட்டெரிக்கும் சூரியனையும்
விழித்தபடியே பார்க்கிறது
சண்கிளாஸ்

நாங்கள் இருக்கிறோம் பயம் வேண்டாம்
இராணுவம் சொல்கிறது
சுற்றி நிற்பதோ மக்கள்தான்...!




குருதி குடிக்கும் அட்டை
குந்தி இருக்குது மலையில்
தேயிலைத்தோட்டம்...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொதிக்கிறார்கள் ஈராக் மக்கள்
அமெரிக்க அரசின்
கொழுப்பால்...!



தமிழ்மக்கள் சாகக் கூடாது
அம்மா அரசு கவனம்
மருந்துக்குத்தடை...!

கோவில் சாமி தெரியாத
வரிசையில்
கடைகள் ..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனப்பாதுகாப்பு சிறப்புமாநாடு
மரம் நடுவது பற்றி
தலைவர் மரக்காலை முதலாளி.



உடல் உறுப்பு வாங்க
வரிசையில் ஐயர்
சாதி ஒழிப்பு.


பிள்ளையை அனுப்பினர் பெற்றார் பள்ளி
படிக்க முடியவில்லை.
கொண்டாள் பள்ளி சகதோழனுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசம் குடிக்கிறா வெற்றிக்காக
கட்சித்தலைவி
ஜே. வி. பி கூட்டணி.

கொள்கையெதற்கு கூட்டணியெதற்கு
நம்ம கட்சி தேர்தலில் வெல்ல
பேரினவாதம் மட்டுமே போதும்.




அம்மாவென்ன ஐயாவென்ன..?
இருவரும் சமாதானப்பிரியர்தான்
கதிரையில் ஏறும்வரை...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயலை உறுதிப்படுத்து
உன்னை நீ நம்பு
வெற்றி உனக்கு நிச்சயம்.

புல்லின் இன்பத்தை கலைக்கிறான்
கிழக்குதிக்கும் கதிரவன்
பனிக்கால்புல்.



பேருக்கு மக்களாட்சி
நடப்பது மன்னராட்சி
வாரிசு அரசியல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடிக்கப்பட்டது மாவீரர் சமாதி
ஊற்றப்பட்டது நெய்
விடுதலைத் தீக்கு.



ஸ்ரீலங்காவில் அரசியல் குழப்பம்
சமாதானப்படுத்த அடிவிழுந்தது
தமிழரின் தலையில்.

அம்மாவின் நினைவு மலர்
படித்து முடிக்கப்பட்டது
புற்றில் வளர்ந்த கறையானால்...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாதானப் புறாவின் வேசம்
கலைந்தது...
ஜே. வி. பி கூட்டால்...!

தொட்டு விட்டார் என் உடலெல்லாம்
என் கணவர்...
தொட மறந்தார் என் உள்ளத்தை..!



பரந்த புல்வெளி வளர்ந்த புல்நுனி
தேன் குடித்தது பனித் துளி
மேற்குலக கலாச்சாரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழவன் இலக்கியம் இன்று
தமிழகத்தில் வரவேற்பு
தமிழன் தமிழனாகவே வாழலாமென்று.



தடையை என்றும் உடைக்கலாம்
மனதில் உறுதி
அம்மியாய் இருந்தால்...!

போதுமென சொல்லாத ஒன்று
இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஏக்கம்
மூட்டையில் கட்டாய் இருந்தாலும் பணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேன் குடிக்கும் ஆசையில்
அம்மணி குளவிக் கூட்டுக்குள் கை
புதிய அரசியல் கூட்டணி..!

செய்ய செல்கின்ற செயல் விலைமதிப்பற்றது
செய்த செயலின் விளைச்சலை காணமுடியாதது
செந்தாமரை முகத்து வீரர் கரும்புலிகள்...!



பட்டாம் பூச்சியாக பறந்து திரிந்தவள்
கூண்டுக் கிளியாக மூலையில்
உடற் கூற்றின் வெளிப்பாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்வுத் திட்டத்தை குளப்புவோர்கள்
தமிழரின் இலட்சிய தமிழ்ழத்துக்கு
அத்திவாரம் கட்டித் தருவோரே...!



உக்கிய எலும்பைபக் கடித்த நரியாரின் நினைப்பில்
அதிகார அம்மணியின் இதயத்து நினைப்பு
தமிழ் மறவர் படையைப் பற்றி...!

என்றும் ஈழத் தமிழிச்சியின்
கருப்பை
சுமப்பது ஒரு புலியையே...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆப்பிழுத்த கதையாய்ப் போச்சு
அம்மணிக்கு...
புதிய ஜே.வி.பி கூட்டு

மல்லாந்து படுத்தவன்
துப்பும் செயலாய் - நாட்டின்
தலைமையின் செயலும் பேச்சும்...!



கொட்டிண்ட பூவாய்
கொட்டிய பலாச்சு
சமாதான புரிந்துணர்வு...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னிப் பசுவை கலைக்குது நாம்பன்கள்
கூடவே ஓடுது குறிபோட்ட எருதும்
ஈழத்தின் இன்றைய தேர்தல் நிலை.



செம்மணியில் புதையுண்ட
எங்கள் கண்ணகிகள்
கட்டாயம் வெடிப்பார்கள் குண்டாய்...!

வயதானவரின் இரண்டாம் தாலி
கன்னிப் பெண்ணுக்கு தூக்குக் கயிறு
சிந்திப்பதெப்போ எம் சமூகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்ப்பாலில் உப்புப் பார்போரே
தன்னினத்தை எதிரிக்கு காட்டிக்கொடுக்கும்
தமிழ் தலைமைகள்.



பக்கத்து வளவில் மாடு செத்தது
வேட்டை நாய்கள் மகிழ்ந்தன
தமிழன்செத்தான் குண்டடியில் மகிழ்ந்தது
சிங்களப்படை...!

இழப்பதற்கு எதுவும்
இல்லாத நிலையே
தமிழனின் போர்ப் பிரகடனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோயை சோதனைசெய்ய விரும்பாத
வைத்தியர்கள் சத்திர சிகிச்சைக்குத் தயார்...
தமிழர் தீர்வுத்திட்டப் பேச்சு.

குண்டு போட்டவன் தலைசிதற
குண்டு மழை...
விமான நிலையத் தாக்குதல்..!



பச்சை யானைக்கும் பயமாம்
தமிழர்
கட்டெறும்பாய் இருப்பது..!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றோஜாவுக்கும் முள்முருங்கைப் பூவுக்கும்
பூக்கடை வாசலில் சண்டையாம்
மணமாலை தனில் சேர.

ஸ்ரீலங்காவில் பெரும் ஆதாயம் பெற்றது
2001 வரை மாடி கட்டியவன்.




யாழ்ப்பாணத்துக்கும் காலிக்கும் தூரம்தான்
அதைவிடப் பெரிய தூரம்
சிங்கள இனவாதத்துக்கும் தமிழர் தீர்வுக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குத்தரிசியில் தவிடு போல
ஸ்ரீலங்கா அரசியலில் இனவாதம்
அதை த்ட்டினால்தான் ந்க்கலாம்!



உயிர்க்கொல்லி ஆயுதமாம் ஈராக்கில்
சண்டையை தொடங்கினார் புஸ்
பதவிக்கே வேட்டு வைக்குது சொன்னபொய்

நேற்று ஆப்கானிஸ்தான் இன்று ஈராக்
அமெரிக்க அத்தும்றல்
நாளை எது ஈரானா...!?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றவாளிகளை புனிதர் ஆக்கும்
ஸ்ரீலங்காவில் அமைக்கப்படும்
விசாரணைக்குழுக்கள்

வண்டுகள் எல்லாம் வன்னிசென்றதாம்
தேன் குடிக்க ஸ்ரீலங்காவில்
ஸ்ரீலங்காப் பூவெல்லாம் இனவாத விசமாம்



யுத்தச்சட்ட விலக்கல் கோவில் பாடசாலைகள்
அது எதிரிக்கு மட்டும்தானாம் ஸ்ரீ லங்காவில்
ஆழ்வோருக்கு இல்லையாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்தநிறுத்த ஒப்பந்தம் அப்படியே இருக்கும்
அம்மணி சத்தியம்
வன்னியை சுற்றி யுத்த உளவு விமானம் படப்பிடிப்பு.

தெருவிளக்கு ஒளியை நம்பிய
விட்டில் பூச்சிகளின் நிலையாச்சு
அம்மணியை நம்பிய சில தமிழருக்கு



அப்பா சுகமா...!? அம்மா சுகமா...!?
வேரைத்தேடும் விழுதுகள் முதியோர் இல்லத்தில்
புலம்பெயர் வாழ்க்கையின் அவலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர்க் காளி அம்மன் நேத்தி முடிக்க
ஊர் வலம் போனது ஆட்டுக் கடாக்கள்
வீதி எல்லாம் மிளகாய்த் தூள் வாசனை...!



அம்மாவின் பன்னீர்க் குடம் உடைப்பு
கடல் நீரில் கடகத்தில் கரைப்பு.
மானுடத்தின் மகத்தான வரலாறு...!


தேன் குடிக்கும் ஆசை அம்மணிக்கு
உடைபட்டது குழவிக் கூடு
புதிய தேர்தல் கூட்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலையெல்லாம் நரைச் சாயம் பூசுகின்றேன்
என்னை நான் அழகு செய்ய அல்ல.
என் மனைவி கவலையை நிறைவு செய்ய!

எல்லோரும் போடும் கோலம் முற்றத்தில்
அகதித் தமிழன் போடும் தினக்கோலம்..!
ஏக்கம் நிறைந்த படபடக்கும் நெஞ்சுக்குள்.



நாட்டின் புனிதமான தேசியக்கொடி ஏலம்விட்டு
தங்கள் சொந்த கட்சிக்கொடிக்கு சாயம் பூசுகிறார்கள்
சிங்களப் பேரினவாத அரசியல் வாதிகள்...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதை வியாபாரி
கூற்றே....!
சந்திரிகாவின் தீர்வுப்பேச்சு..!



எனக்கு இது எப்பவும் பயன்படாது
எதற்கும் இருக்கட்டும் உன் ஞாபகமாய்
உன்நெற்றியில் இருந்து கழன்ற ஒட்டுப்பொட்டு...!

அரிசி இருந்தால்தான் அதன்பெயர் நெல்லு
அது உள்ளே இல்லாட்டி
அதன் பெயர் சப்பட்டை - மனிதனின் நிலையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூரண மனிதனின் நெஞ்சுக்குள் அவசியம்
இருக்க வேண்டியது மானிட நம்பிக்கை
அந்த மானிட நம்பிக்கை இல்லாதவன்
அரைமனிதன்தான்!

உறவுக்கு என்றும் அவசியம்
இருக்க வேண்டும் உண்மை
உண்மை இல்லாத உறவுதான் நடிப்பு...!



நட்டநடு இராத்திரியில் ஓடிப்போனவள்
சறுக்கி விழுந்தாள்...!
வாழ்க்கையில் அல்ல வீட்டுப்படிக்கட்டில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏவுகணைகள் வானை முட்டுது
அங்கே எரிவதும் அழிவதும்
மக்கள் பணமும், மானிட உயிரும்தான்...!



விடிவெள்ளி ஆயிரம் வந்தது போனது
ஆனால் விடியலைக் காணவில்லை
வாழ்க்கைக்காய் ஏங்கும் முதிர் கன்னி...!

இலக்கிய ரசனை கூடி விட்டதோ...!
அஃர்தினை கறையான் இனத்துக்கு
இப்படி வாசித்திருக்கிறது என்புத்தகத்தை...!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் மானிட வெற்றிக்கு அவசியம்
இருக்க வேண்டும் விடா முயற்சி..!
இல்லாதவன் வாழ்வில் வெற்றி பூச்சியமே...!



தன் தாயகத்தைத் தொலைத்து விட்டு
உலக வரலாறு எழுதுகின்றவனே
புலம் பெயர் அகதி...!


பருவ மங்கையின் மனதை
உடைத்து காவேரியை வரவழைப்பதே
சீதனக்கொடுமையின் பெருங்கொடுமை...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயங்கரவாத அழிப்பாம் அமெரிக்கத்தாக்குதல்
ஆப்கானிஸ்தான் ஈராக்கில் குண்டு!!?

ம்னவத் தொழிலாளியின் வாழ்க்கைக்கு
அருள்கொடுக்கும் அட்சய பாத்திரம்
ந்லநிற பெருங்கடல்..!



மின்னொளி விளக்குகள் எரிந்தன
ந்ண்ட பெருவ்திகள் சிரித்தன
யாழ் குடா நாட்டில் மந்திரி பவனி வந்தார்...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணுக் குண்டு செய்வோரே
அணு ஆயுதம் செய்வோரே...!
மனித மனத்தை அளக்கக்கருவி.!?



ரணில்கையில் சமாதானப் பெட்டி
திறப்பு அம்மணி கையில்
சமாதான ஒப்பந்தம் தவிப்பு!

எளிமை பற்றி மேடையில்
எடுத்து உரைக்கிறார் பேச்சாளர்
ஏறிச்செல்கிறார் ஏ.சி காரில்...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த மாதம் உள்ளூராட்சித் தேர்தல்
தீபாவளி தான் தெருச் சண்டை
நல்ல காலம்! வடகிழக்கில் இல்லையாம்!

ஆட்டம் கண்டது பயங்கரவாதப் போரில்
ஆப்ஹானிஸ்தான் மட்டுமல்ல
அகில உலகமும்தான்.



வீரகேசரி கசக்கி எறிந்தது காகிதம்
ஆனால் அங்கே காயப்பட்டு அழுதது!
எனது கசங்கிய கவிதைகள் அல்லவா..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்திய கண்டம் பூரண ஆயுசு
அம்மா சர்வாதிகாரியின்
சர்வ அதிகாரப் பதவி..!



கற்பு நெறி ம்றுவோர்க்கு
கடவுளின் தண்டணையே
எயிட்ஸ்


பயமற்ற பாதகவாழ்க்கைக்கு
தேடிக்கொள்ளுங்கள்
ஜனாதிபதிப்பதவியை ஸ்ரீ லங்காவில்..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனவாத விதை ஆசியாவில் மட்டுமல்ல
விதை தூவப் படுகுது
வளங்கொண்ட ஐரோப்பாவிலும்தான்!

கொக்கின் தவம் கலைந்தது
கொழுத்த கெழுறு ஒன்று
கொக்கின் நீண்ட சொண்டில்..!



எந்த றப்பர் கொண்டும் அழிக்கமுடியாது
சிங்கள அரசியல்வாதியின்
இனவாதக் கோட்டை..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவில் குளிர்ச்சி தரும் சந்திரனும்
பகலில் வெப்பம்தரும் சூரியனும் குளிப்பது
என்வீட்டுப் பக்கத்து குளத்தில் தானோ...!?



பேச்சுவார்த்தைகள் நூறு நடந்தது
காலகாலமாய் தோற்றுப்போனது
தமிழர் புனிதமான நம்பிக்கைதான்!


ஆப்பிழுத்த கதையாய்ப் போச்சு
பண்டா மட்டுமல்ல
சொந்தக் கட்சிக்குள்ளேயே...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரசவம் தந்தது அப்பாவுக்கு
பிள்ளையை மட்டுமல்ல
பிள்ளையின் தாயையும் தான்.

ஆற்றங்கரை ஆலமரம் இலை உதிர்ந்தது
ஆறு மாடி சொந்தக்காறப்பிள்ளை உடல்மெலிந்தது!
தரமான போசாக்குக் கொண்ட தாய்ப்பாலின்
போதாமை...!



பெண்ணினத்தின் மாபெரும் பலவ்னம்
ஆண்டவன் அருளிய கர்ப்பப்பையே...!
அதுதானே தாய்மைக்கு பெரியபலமும்...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்ணியில் நனைந்து தீயில் வதங்கிய ரசத்துக்குமணம்
எதிரிகுண்டால் காயப்பட்ட படைக்கு வலி...!
இரண்டையும் கொடுப்பது பெருங்காயம்...!!



மகனுக்காக மருமகளைத் தேடிய தாய்
இன்று அந்தோ அவள் பரிதாபம்..!
மகனைத் தேடித்தேடிக் களைத்து விட்டாள்!

தாய்க்குலத்துக்கு மட்டுமில்லை கற்பப் பை
ஆணுக்கும் உண்டு கற்பப்பைகள்..!
கற்பனை வளங்கொண்ட கவிஞனுக்கு!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசுமை நிறைந்த புற்தரையின் புல்நுனியில்
பக்குவமாய் உடல் செய்யும் பனித்துளி
கதிரவன் வரவு வரைதான்

மணிமகுடம் அணியட்டும் நீதி
சிம்மாசனம் அமரட்டும் உண்மை
சிறைக்கூடம் செல்லட்டும் அநீதி



விஞ்ஞானிளே! பூமிக்கும், சூரியனுக்கும்
இடைவெளியைச் சுருக்கி விடாதீர்கள்...!
கீழே வாழ்வர்கள் உயிருள்ள பிராணிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பகுதி-3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாப்பான, அகதிகளாய்
கொட்டும் பனிச்சேற்றில் - நாங்கள்
தேடி வருகின்றோம் சட்டெடுத்தவனை!



சுமையை சுமக்கும் கழுதைகளாய்
எத்தனை காலம்தான் வாழ்வது - இந்த
அன்னிய நாட்டில் இனியும்.!

எங்கள் இளமையை எரித்தபடி - உள்ளத்தில்
கனவுகளை நிறையச் சுமந்தபடி
பணம் அனுப்புகின்றோம் சுற்றம்வாழ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலை பேசிகளும் கடிதங்களும்
எத்தனைகாலம் நதியாய் ஓடும்
எங்கள் உறவுத் தாகம் தீர்க்க!

குடும்பத்தில் ஒளி ஏற்றுவதற்காய்
நமக்குள் எத்தனை எத்தனை பேர்
விளக்கில் விழுந்த விட்டில்களாய்!



அன்று பண்டா சொன்னதை
இன்று பியகஸ்ரோ உணர்த்துகின்றார்
தமிழனை தமிழனாய் வாழச்சொல்லி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் புலம் பெயர் வாழ்க்கையில்
தேடியதோ மிகமிக கொஞ்சம் ஆனால்
தொலைத்ததோ மிகமிக அதிகம்

ஆமைக்கு நோய்
அரசு அழைப்பு, லண்டன் மருத்துவர்க்கு
வன்னி மக்களுக்கு மருந்துத்தடை!





எங்கள் உடல் புதைக்க இடம் வேண்டாம்
எங்கள் உயிர்த் தமிழ் விதைக்க நிலம் வேண்டும்
உயர் மாவீரர் இறுதி நினைப்பு..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வஞ்சகர் வாய்வச்சில் மயங்கிய
எங்களின் அன்றைய தலைகளின்
சிந்தனைக் குறைவே! இன்றைய இரவல்த் தாயகம்..!

பளைய செம்மணி வேண்டாம் நமக்கு
புதைந்த மாவீரர் விதைகொண்ட
நந்தவனமாகட்டும்..!



அரசின் சமாதானம் தொடரலாம் நிற்கலாம்
ஆனால் மாவீரர் இலட்சிய விதைப்புக்கு
அரசு பதில் தந்தே ஆகனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதை நெல் மூட்டைகளை சந்திரிகா
பூட்டித் தீ வைத்தால்...
தமிழர் வயல்க்காடு விளையாமல் கிடக்காது!



சூரியனை மறைக்க ஈழவானத்தில் பந்தல்
அம்மணி சந்திரிகா இரகசியத் திட்டமாம்
இலங்கை தேசத்துக்கே சூரியன் உதிக்கான் நிச்சயம்!

உலகத்து மக்கள் இதயத்தில்
உன்னத இடம், தமிழர் போராட்டம்
குப்பை மேட்டில் சந்திரிகாவின் இனவாதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரிகாவின் சிந்தனையில் புதிய
கண்டுபிடிப்பு
மக்கள் சமாதானத்துக்காக யுத்தம்..!

கோடி கனவோடு தட்டுத் தூக்கினேன் நான் இங்கு
தாயக நினைப்போடு தட்டுத் தூக்கினான் பிள்ளை அங்கே
என்னைவிட உயர்ந்தவன் பிள்ளையே.!



உலகத் தமிழ்ப் பெண்கள் பெருமை
கண்ணகி சிலை மோதி உடைக்கப்பட்டது
இன்றைய பதவியாசைக் கண்ணகியால் !!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலம் பெயர் வாழ்வில்
தமிழர் சேமிப்பு பொக்கிசங்கள்
புகைப்பட அல்பங்களும், வீடியோப் பிரதிகளும்.



அம்மா எங்குது கொல்லையில் பசுக்கன்று
மம்மி எங்குது வீட்டுக்குள் தமிழ்ப் பிள்ளை
தமிழர் அன்னிய மொழி மோகம்.

வார்த்தையில் சமாதானப் பேச்சோடு
வஞ்சக குள்ள நரிகளும்
கண்ணுக்குத் தெரிந்ததாம் ஊடகவியலாளர் சந்திப்பில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*108 இருந்து 786ஐ கழிக்க விரும்பும் மனிதர்
நாளை மானிடத்தை மண்ணுக்குள்தான்
தேடவேண்டும்..!*

*ஊழல் ஒழிக்கப்பட வேண்டும்
அனைத்துக் கட்சிகளும் ஊர்வலம்
கசிப்புக் கடைக்காறன் முன்னணியில்.*



*உலக சிறுவர்கள் பாதுகாப்பு
மாநாடு ....
கள்ளிப்பால் வியாபாரி தலைமையில்!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணகி சிலை உடைப்பு
உலகத் தமிழர் துடிப்பு
நாடகக் கண்ணகி ஆட்சி நகைப்பு...!

வெண்புறாக்கள் கூட்டம்
ஊர்வலம்
விதவைக்கு உரிமை கேட்டு




வரம்பை மீறியது
அதனால் தறிக்கப்பட்டது...!
விரலின் நகங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேனில்லா மலரில்
தேன் குடிக்க நினைப்பு
அகதி வாழ்வின் கனவு..!

கம்பியில் நடக்கும்
சர்கஸ்காறன் கவனம்
சமாதான பேச்சுக்கள்.




ஆயிரம் பழங்களின்
அற்புத சாறு
தாய்மண் தண்ணீபோல் தாகம் தீர்க்காது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழுத்த உடலை
மேலும் கொழுக்க வைத்தது
உடல் மெலியக் குடித்த மருந்து




பாதாள உலகக் கோஸ்டி தலைவன்
பட்டாள மந்திரியாம்
ஆளும் அம்மணியின் ஜனநாயகம்..!

தேசியக் கொடியை ஏலத்தில் விற்று
கட்சிக் கொடிக்கு வண்ணம் தீட்டும்
சிங்கள இனவாத அரசியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சிக்கொடிக்கு சாயம் பூசுது
சிங்களக் கட்சிகள்
தேசியக்கொடி தீயில்..!

ஆட்சியின் தலை பெண்ணிடம்
ஆனால்
வீதியில் நடமாட முடியவில்லைபெண்கள்.



உலகுக்காய் விவசாயி வயலில்
கேள்விக்குறியாய் - ஈழத்தில்
அவன் உயிர்கூட கேள்விக்குறிதான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா வண்டியைப்பார்த்தபடி வன்னிவீதியில்
பிள்ளைகள்
காலைப்பிடித்தபடி பசியில்.

மூன்றாண்டாய் பூக்கவில்லை
முற்றத்து மாமரம்
திட்டலை விட்டு தேடுங்கள் வைத்தியரை!




ஒல்லித் தென்னைக்கு
உலக்கையிடி
விஞ்ஞானத்தில் மெய்ஞானம்..!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எருமையையும், கேப்பையையும்
வண்டிலில் பூட்டினால்
பயணம் இலக்கையடையாது..!

அல்லிப்பூ, அலரிப்பூ
பூ வினம்
மணமாலையில் சேராது.




விமானநிலையத் தங்கிடம்
தமிழன்
அகதி வாழ்க்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருசாண் வேலிக்காய்
சண்டையிட்டவர்கள்
நாட்டுக்காய் ஒற்றுமை..!



சைவக்கடை குப்பைவாளி
பொருட்கள்
ஸ்ரீலங்கா பிதமரின் பேச்சு!

பள்ளம் நிரவ
பிட்டி
சரியத்தான் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடுப்பு, சுக்கான்
இரண்டும் இல்லா
அம்மணி அரசு..!

வெள்ளைப்புறாவை
வெடிகுண்டாக்கியது
சிங்கள இனவாதம்!



மணக்கனும் தமிழன் குருதி
தமிழ்க்கவிஞன்
பேனா மையில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செத்துப்போனவன்
எழுந்து வருவான்
தேர்தல் நாளில்...!




மலிவு விலையில் நீதி
விற்பனை
ஸ்ரீலங்கா மன்றுகள்.

பேசித் தீர்க்கட்டாம்
பிரச்சனையை
கூறுவது சந்திரிகா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழவன் குருதி
கங்கைக்கும் காவேரிக்கும் சமன்
ஆறாக ஓடுது தினம் தினம்.



கன்னிகள் வாழனும்
அலரிப்பூ வாய்
கற்புக்கு வேலியது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புலம்பெயர் வாழ்க்கையில் பலர், தான்,
தன்குடும்பம் என்று வாழும்
காலகட்டத்தில், தன்குடும்பம் என
சுருங்கி விடாமல் தொடர்ந்து பத்திரிகை,
வானொலி, சஞ்சிகை என்று தனது
அகவை அறுபத்தைந்திலும்
உணர்வோடு இளம் குருதிகள்
சிலித்தெழும் உணர்வலையில்
பல சிந்து கவிதைகளை
எழுதி வருகின்றார்
கவிஞர் பொன்னண்ணா அவர்கள்.

- கவிஞர். இரா. இரவி -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org